தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள் (23.03.2015)

### பீன்ஸ், அவரை விலை உயர்வு; முருங்கைக்காய் விலை வீழ்ச்சி



சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் அவரை, பீன்ஸ் உள்ளிட்ட காய்கறிகளின் விலை சற்று அதிகரித்துள்ளது.கடந்த மாத இறுதியில் கிலோ ரூ.150-க்கு விற்கப்பட்ட ஒரு கிலோ முருங்கைக்காய் தற்போது ரூ.20-க்கு விற்கப்படுகிறது.சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் கடந்த வார தொடக்கத்தில் தக்காளி, உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம் உள்பட பெரும்பாலான காய்கறிகளின் வரத்து அதிகரித்திருந்தது.

இதனால், கடந்த 2 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு காய்கறிகளின் விலை குறைந்து காணப்பட்டது. அனைத்து காய்கறிகளும் கிலோ ரூ.20-க்கும் குறைவாகவே விற்பனையானது.இந்த நிலையில், கடந்த சில நாள்களாக மார்க்கெட்டுக்குக் கொண்டுவரப்படும் காய்கறிகளின் வரத்து சற்று குறைந்ததால் பீன்ஸ், அவரைக்காய் உள்ளிட்ட சில காய்கறிகளின் விலை ஞாயிற்றுக்கிழமை கிலோவுக்கு ரூ.5 முதல் ரூ.12 வரை

அதிகரித்தது.காய்கறிகளின் மொத்த விலையில் சிறிய மாற்றமே நிலவியபோதும் சில்லறை விலையில் வாங்கும்போது இரண்டு மடங்கு விலைக்கு விற்கப்படுவதாக பொதுமக்கள் புகார் தெரிவித்தனர்.

**கோயம்பேடு மார்க்கெட்டில் காய்கறிகளின் விலை நிலவரம்:**

**மொத்த விலை (அடைப்புக்குறிக்குள் பழைய விலை) சில்லறை விலை**

பெரிய வெங்காயம் ரூ.25 (20) ரூ.32

சின்ன வெங்காயம் ரூ.25 (30) ரூ.35

தக்காளி ரூ.15 (12) ரூ.24

அவரை ரூ.30 (20) ரூ.40

பீன்ஸ் ரூ.35 (25) ரூ.45

பாகற்காய் ரூ.25 (18) ரூ.35

காலிபிளவர் ரூ.15 (10) ரூ.22

முருங்கைக்காய் ரூ. 20 (30) ரூ.40

முட்டைக்கோஸ் ரூ.15 (12) ரூ.24

கத்தரிக்காய் ரூ.20 (15) ரூ.30

வெண்டைக்காய் ரூ.20 (20) ரூ.35

இஞ்சி (பழையது) ரூ.55 (45) ரூ.65

பச்சை மிளகாய் ரூ.20 (25) ரூ.35

உருளைக்கிழங்கு ரூ.20 (18) ரூ.35

பச்சைப் பட்டாணி ரூ.65 (50) ரூ.70

## அமைக்க வீடுகளில் காய்கறித் தோட்டம் வேண்டும்

வீடுகளில் காய்கறித் தோட்டம் அமைக்க மக்களுக்கு ஆர்வமூட்டும் வகையில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என தோட்டக்கலைத் துறை அலுவலர்களை மாவட்ட ஆட்சியர் கொ. வீரராகவ ராவ் கேட்டுகொண்டார்.திருவள்ளூர் மாவட்ட திட்டக் குழுக் கூட்டம் அதன் தலைவர் ப.ரவிச்சந்திரன் தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.இதில் அரசுத் துறைகளின் சார்பில் செயல்படுத்தப்படவுள்ள திட்டங்கள் குறித்து சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளிடம் கேட்டறியப்பட்டது. இதைத் தொடர்ந்து, ஆட்சியர் பேசியதாவது:திருவள்ளூர் மாவட்டத்தில் வரும் கல்வி ஆண்டை சிறப்புடன் தொடங்க பாடப் புத்தககங்களை விரைவில் வழங்க வேண்டும். பருவ மழை குறைவாக இருந்தாலும் நெல் சாகுபடியை உயர்த்தி சிறந்த முறையில் பயிரிட ஊக்கம் அளித்து தொடர் நடவடிக்கைகளில் வேளாண்மைத் துறையினர் ஈடுபட வேண்டும்.

விவசாயிகளுக்கு அரசு மானியத்தில் வழங்கப்படும் சூரிய ஒளி மோட்டார்களை விரைந்து வழங்க வேண்டும். உரங்கள் தட்டுப்பாடின்றிக் கிடைக்க வழி செய்ய வேண்டும். கர்ப்பிணிகளுக்கு முத்துலட்சுமி மகப்பேறு நிதியுதவி உரிய காலத்தில் வழங்க வேண்டும், அனைத்து போக்குவரத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்ய தமிழ்நாடு

அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்.தோட்டக்கலைத் துறை சார்பில் இட வசதி உள்ள வீடுகளில் காய்கறி தோட்டம் அமைக்க மக்களுக்கு ஆர்வமூட்டும் வகையில் அதிக விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். அனைத்து அரசுத் திட்டங்களும் உரிய முறையில் விரைவாக பயனாளிகளுக்கு சென்று சேர்க்க வேண்டும் என்றார்.

மாவட்ட ஊராட்சிக் குழுவின் செயலர் மைதிலி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

## ஆண்டிபட்டியில் தயாராகும் கிருமி நாசினி துடைப்பங்கள்

ஆண்டிபட்டியில் தயாராகும் கிருமி நாசினி தன்மை கொண்ட சீகு புல் துடைப்பங்கள் வெளிநாடுகளுக்கும் அனுப்பப்படுகின்றன.சீகுபுல் மற்றும் காட்டுப்புல் என அழைக்கப்படும் புல் ஒரு வகை முள் வகையை சேர்ந்தது. இது ஆண்டிபட்டி வேலப்பர் கோயில் மலைப்பகுதி கணேசபுரம் மற்றும் வனப்பகுதியில் விளைகிறது. இப்பகுதியில் உள்ளவர்கள் வனப்பகுதிக்குச் சென்று சீகு புல்லை சேகரித்து வெட்டி எடுத்து வந்து காய வைக்கின்றனர். பின் அவற்றில் உள்ள முட்களை நீக்கி, சீராக வெட்டி அடுக்கி வைத்து அவற்றை துடைப்பமாக கட்டுகின்றனர். பின்னர் இவை விற்பனைக்கு கொண்டு செல்லப்படுகின்றன.இதனை ஆண்டிபட்டி, சின்னமனூர் மற்றும் போடி

பகுதிகளைச் சேர்ந்தவர்கள் தங்கள் வீடுகளுக்கு துடைப்பமாக பயன்படுத்தி வருகின்றனர். இந்த துடைப்பம் கிருமிகளை கொல்லும் கிருமி நாசினியாக செயல்படுகிறது. இந்த துடைப்பான் உள்ள வீட்டில் கரப்பான்பூச்சிகள், விஷ பூச்சிகள் அண்டாது எனக் கூறப்படுகிறது.

இதனால், வெளிநாடுகளில் வசித்து வரும் தேனி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் இந்த துடைப்பத்தை பற்றி அறிந்துள்ளதால் அவர்கள் தங்கள் வீடுகளில் இவற்றை பயன்படுத்துவதாகக் கூறப்படுகிறது. எனவே துடைப்பங்கள் வெளிநாடுகளுக்கும் ஆர்டரின் பேரில் அனுப்பப்படுவதாக அவற்றை தயாரிப்பவர்கள் தெரிவித்தனர்.

## <u>வேளாண் காடுகள் கூட்டமைப்பின் தொடக்க விழா</u>

மேட்டுப்பாளையம் வனக் கல்லூரியில் மர ஆலைகள் சார்ந்த வேளாண் காடுகள் கூட்டமைப்பின் தொடக்க விழா சனிக்கிழமை நடைபெற்றது.

இவ்விழாவுக்கு வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் ராமசாமி தலைமை வகித்தார். கூடுதல் முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் கிருஷ்ணகுமார் முன்னிலை வகித்தார். வனக் கல்லூரி முதல்வர் கிருஷ்ணமூர்த்தி வரவேற்றார். கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் முனைவர் பார்த்திபன் திட்ட விளக்க உரையாற்றினார்.

இதில் துணைவேந்தர் முனைவர் ராமசாமி பேசியது:

தற்போதைய சூழ்நிலையில் காகிதம், தீக்குச்சி, உயிரி எரிபொருள் உற்பத்தி ஆலைகளுக்கு மரம் சார்ந்த இடுபொருள் தேவை அதிகமாக உள்ளது. இந்திய அளவில் அதிக தீக்குச்சி ஆலைகளை கொண்ட தமிழகத்தில் மர இடுபொருள்களின் தேவை அதிகரித்து வருகிறது. இந்தியாவில் 1988-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட தேசிய வனக் கொள்கையின்படி ஆலைகளின் தேவைக்கு வனங்களில் மரங்கள் வெட்டுவது தடை செய்யப்பட்டதைத் தொடர்ந்து, மர ஆலைகள் விவசாயிகளுடன் இணைந்து வேளாண் காடுகளை அமைத்து தங்கள் மர இடுபொருள் தேவையைப் பூர்த்தி செய்ய வலியுறுத்தப்பட்டது. அதைதொடர்ந்து வனக்கல்லூரியில் தொடங்கப்பட்ட திட்டத்தின்படி, சவுக்கு தீக்குச்சி, மலை வேம்பு, குமிழ், கடம்பு மரங்களின் சாகுபடி அதிகரிக்கப்பட்டு, இன்று தமிழகத்தில் 70,000 ஏக்கரில் வேளாண் காடுகள் திட்டம் செயல்படுத்தப்படுகிறது என்றார். நபார்டு வங்கி மேலாளர் நடராஜ், வேளாண் வளர்ச்சித்துறை இயக்குநர் சின்னத்துரை, ஆராய்ச்சி இயக்குநர் மகேஸ்வரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

## பால் உற்பத்தி குறித்த திறன் மேம்பாட்டுப் பயிற்சி

கிருஷ்ணகிரியில் கறவை மாடு பராமரிப்பு, பால் உற்பத்தி குறித்த திறன் மேம்பாட்டுப் பயிற்சி அண்மையில் நடைபெற்றது.கிருஷ்ணகிரியில் உள்ள தருமபுரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள்

ஒன்றியத்தில் பால் உற்பத்தியாளர்களுக்கு இந்தப் பயிற்சி முகாம் நடைபெற்றது.இதற்கு ஒன்றியத்தின் பொதுமேலாளர் செல்வகுமார் தலைமை வகித்தார். பயிற்சியை தலைவர் தென்னரசு தொடக்கிவைத்தார். துணைப் பதிவாளர் (பால்வளம்) தனபால், துணைத் தலைவர் பெரியசாமி, துணைப் பொதுமேலாளர் பஸ்வராஜ், மேலாளர் நாகராஜன், மருத்துவர்கள் அனல்விழி, அனிதா, நாகராஜன், ரமேஷ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.இதில், கறவை மாடு தேர்வு, பராமரிப்பு, தீவன மேலாண்மை, அசோலா வளர்ப்பு, கறவை மாடுகளின் இனப்பெருக்கம், கருவூட்டல், கன்று வளர்ப்பு, கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாடு, சங்க உறுப்பினர்களின் பங்கு, பசுந்தீவன வளர்ப்பு குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

## விவசாயிகளுக்கு மானிய விலையில் மின் மோட்டார்

பொன்னமராவதி வேளாண் விரிவாக்க மையத்தில் விவசாயிகளுக்கு மானிய விலையில் மின் மோட்டார் வழங்கும் நிகழ்ச்சி அண்மையில் நடைபெற்றது.தேசிய உணவு பாதுகாப்பு இயக்கத்தின் கீழ் வழங்கப்படும் மின் மோட்டார் விநியோக நிகழ்ச்சிக்கு வேளாண் உதவி இயக்குநர் சி. ஜெயபாலன் தலைமை வகித்தார். துணை வேளாண் அலுவலர் மாணிக்கவாசகம் வரவேற்றார். அட்மா திட்டத் தலைவர் காசி கண்ணப்பன் பங்கேற்று பொன்னமராவதி வட்டாரத்தைச் சேர்ந்த 18 விவசாயிகளுக்கு தலா ரூ. 10 ஆயிரம் மானியத்தில் மின் மோட்டார்களை

வழங்கிப் பேசினார். ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர்கள் அருளானந்தம், குமாரசாமி, முருகேசன், அட்மா திட்ட தொழில்நுட்ப மேலாளர் ராஜூ உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

## "சிறுதானியங்களை அதிக அளவில் பயிரிட வேண்டும்'

சிறுதானியப் பயிர்கள் பயிரிடுவதை விவசாயிகள் மீண்டும் அதிகளவில் தொடங்க வேண்டும் என்றார் புதுச்சேரி பிரெஞ்ச் நிறுவன பேராசிரியை பிர்ஜெட் செபஸ்தியா.தஞ்சாவூர் மனனர் சரபோஜி அரசு தன்னாட்சிக் கல்லூரியின் பொருளாதாரத் துறையின் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை சார்பில், வங்காள விரிகுடா பகுதியில் சுனாமி மற்றும் தானே புயலுக்கு பின்னர் பொருளாதார தாக்கம் என்ற தலைப்பில் தேசிய கருத்தரங்கம் கல்லூரி வளாகத்தில் அண்மையில் நடைபெற்றது. கருத்தரங்குக்கு கல்லூரி முதல்வர் எஸ்.அன்பழகன் தலைமை வகித்தார். இதில் புதுச்சேரி பிரெஞ்ச் நிறுவன பேராசிரியை பிர்ஜெட் செபஸ்தியா பேசியது:

மக்களின் தினசரி உணவுப் பழக்க வழக்கமே சர்க்கரை மற்றும் உடல் பருமன் நோய்களுக்கு காரணமாகிறது. பொருளாதார சூழ்நிலையால் கைவிடப்பட்ட சிறுதானியப் பயிர்கள் பயிரிடுவதை விவசாயிகள் மீண்டும் தொடங்க வேண்டும்.தமிழகத்தில் சிறுதானிய உற்பத்தி நிலங்களின் பரப்பளவு குறைவாக உள்ளது வருத்தமளிக்கிறது. சிறுதானியங்களை அனைத்து தரப்பினரும் வாங்கும் வகையில்,

சிறுதானியங்கள் பயிரிடுவதை அதிகரிக்க வேண்டும் என்றார் பேராசிரியை பிர்ஜெட் செபஸ்தியா.கருத்தரங்கில் முன்னாள் மண்ணியல் துறை பேராசிரியர் எம். மணிவேல், மன்னர் சரபோஜி கல்லூரியின் பொருளாதாரத் துறை தலைவர் வி.துரைராஜ், பேராசிரியர்கள் டி.திருநாராயணன், ஏ.அருள்ராஜ் ஆகியோர் உள்ளிட்ட பலர்பங்கேற்றனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**விவசாயிகள் குறை தீர்ப்பு நாள் கூட்டம்**

ஊட்டி : ஊட்டியில் விவசாயிகள் குறை தீர்ப்பு நாள் கூட்டம் நடந்தது. மாவட்ட வருவாய் அலுவலர் பாஸ்கரபாண்டியன் தலைமை வகித்தார். தோட்டக்கலை துறை இணை இயக்குனர் மணி முன்னிலை வகித்தார். அனைத்து துறை அதிகாரிகள், அலுவலர்கள் பங்கேற்றனர். விவசாய சங்கங்களிடமிருந்து, 42 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டன.ஆவின் அதிகாரிகள் கூறுகையில்,'ஊட்டி 'ஆவின்' நிறுவனம் மூலம் வைக்கப்பட்டுள்ள பூத்களில், ஆவின் தயாரிப்புகளை சுத்தமாக வைத்து விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது' என்றனர். கால்நடை பராமரிப்பு துறை அதிகாரிகள் கூறுகையில்,'நீலகிரியில், கால்நடை வளர்ப்போருக்கு மானிய விலையில் கால்நடை பராமரிப்பு

துறை மூலம் உலர் தீவனம் வழங்க நடவடிக்கை எடுப்பட்டு வருகிறது' என்றனர்.தோட்டக்கலை துறை அதிகாரிகள் கூறுகையில், 'இலவச விவசாய மின் இணைப்பு வேண்டி பெறப்படும் விண்ணப்பங்களை செயற் பொறியாளர் அலுவலகத்தில் பதிவு செய்து, அரசு குறியீடு பெறப்படும் போது, மூப்பு அடிப்படையில் மின் இணைப்பு வழங்கப்படும். மண்புழு உர கூடாரம் அமைக்க முன் வரும் விவசாயிகளுக்கு மானிய உதவி வழங்கப்படுகிறது. ரசாயன மற்றும் பூச்சி மருந்துகளின் பயன்பாட்டை குறைக்க, இயற்கை உரங்களை அதிகளவில் பயன்படுத்தும் வகையில், மானிய திட்டங்கள் செயல்படுத்தப்படும்' என, தெரிவிக்கப்பட்டது. நகராட்சி அதிகாரிகள் கூறுகையில்,'ஊட்டி தாவரவியல் பூங்கா முதல் பஸ் நிலையம் வரை, தற்போதுள்ள மின் விளக்குகள் அனைத்தும், எல்.இ.டி., விளக்குகளாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது' என, தெரிவிக்கப்பட்டது.

## **கோமாரி தடுப்பூசி போடும் கிராமங்கள்**

திருச்சி: திருச்சி மாவட்ட கலெக்டர் பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கை: தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ள விலையில்லா கறவை பசுக்கள் மற்றும் அனைத்து விதமான காளைகள், கன்றுகள், எருதுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடுவதற்காக, தனி குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. இன்று, 23ம் தேதி புதுக்கோட்டை, இ.வெள்ளனூர், வெங்கடாசலபுரம், புத்தாநத்தம், வேம்பனூர், உன்னியூர்,

அம்மாசிரம், சேதுராப்பட்டி, பத்தாளப்பேட்டை, அரங்கூர் ஆகிய பகுதிகளில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்படுகிறது. நாளை, 24ம் தேதி கண்ணுக்குழி, கொடும்பாபட்டி, ஆதிக்கரம், ஆலம்பட்டி, எலமனம், குமுளூர், பன்னப்பட்டி மேற்கு, திருநெடுஞ்குளம், காமலாபுரம் ஆகிய பகுதிகளில் கோமாரி நோய் தடுப்பூசி போடப்படுகிறது. எனவே, கால்நடை வளர்ப்போர் இந்த திட்டத்தை நல்லமுறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

## தேவை அதிகரிப்பு, வரத்து குறைவு: அரளி விலை உயர்வு

தேனி : தேனி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக அதிகாலை நேரங்களில் அடித்து வரும் பனிப்பொழிவால் அரளி பூ குறைவாக பூக்கிறது. இதனால் மார்க்கெட்டிற்கு வரத்து வெகுவாக குறைந்துள்ளதால் விலை அதிகரித்துள்ளது. மாவட்டத்தில் பகல் நேரத்தில் வெயில் அதிகளவில் இருந்தாலும் அதிகாலை நேரத்தில் பனி பொழிவு காணப்படுகிறது. இதனால் அரளி பூ க்கள் குறைவான அளவே கிடைக்கிறது. மேலும் தற்போது பங்குனி மாதம் என்பதால் கிராமப்புறங்களில் கோயில் திருவிழா அதிகளவில் நடக்கிறது. இதனால் பூக்களின் தேவை அதிகரித்துள்ளது. வரத்து குறைவு, தேவை அதிகரிப்பு காரணத்தால் சென்ற வாரம் அரளி பூ கிலோ ரூ.40 க்கு விற்பனையானது, இந்த வாரம் கிலோ ரூ. 100 க்கு விற்பனையாகிறது. பூ வியாபாரி செந்தில்குமார் கூறுகையில், ""பனிப்பொழிவு காரணமாக அரளி பூ

வரத்து குறைந்துள்ளது. தற்போது தேவை அதிகரித்துள்ளதால் விலை இரண்டரை மடங்கு உயர்ந்துள்ளது," என்றார்.

## வேளாண் காடுகளை உருவாக்கிய விவசாயிகள்! கோவையில் இன்று புதிய அமைப்பு உதயம்

கோவை : தமிழகத்தில்,70 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் 'வேளாண்மை காடுகள்' உருவாக்கிய, விவசாயிகள் கூட்டமைப்பு இன்று கோவையில் துவக்கப்படுகிறது. அதிகமான மரத்தேவை இருந்தபோதிலும், நாட்டில் வனங்கள் அழிந்து வருவதை தடுக்க, 1955ம் ஆண்டு தேசிய வனக்கொள்கை வெளியிடப்பட்டது. இக்கொள்கையின்படி மரம் சார்ந்த தொழிற்சாலைகள் தங்கள் இடுபொருள் தேவைக்கான மரங்களை வனங்களில் இருந்து வெட்டுவது தடை செய்யப்பட்டது. தொழிற்சாலைகள், விவசாயிகளுடன் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் அடிப்படையில், வேளாண்மை காடுகள் அமைத்து, இடுபொருள் தேவையை நிறைவு செய்துகொள்ள வலியுறுத்தப் பட்டது. ஆனாலும், இத்திட்டம் விவசாயிகளை சென்றடையவில்லை. இதற்கு, இம்மரங்களின் குளோன் மற்றும் விதைகள் கிடைக்காதது ஆராய்ச்சியாளர்கள், நாற்றுஉற்பத்தியாளர்கள், விவசாயிகள் மற்றும் மரம் சார்ந்த தொழிற்சாலை உரிமையாளர்களுக்குள் ஒருங்கிணைப்பு இல்லாதது என பல காரணங்கள் உள்ளன.இச்சூழலில், இந்திய வேளாண் ஆராய்ச்சி கழக உதவியுடன், 2008 - 2014 வரை,'வேளாண்

காடுகள் சார்ந்த மதிப்பு கூட்டு சங்கிலி' எனும் திட்டம் அமல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தில் மரம் சார்ந்த தொழிற்சாலைகள், விவசாயிகள், வங்கிகள் என அனைத்து துறையினரும் ஒருங்கிணைந்து செயல்பட வாய்ப்பு ஏற்படுத்தி தரப்பட்டது. இதன் பிறகே மரம் வளர்ப்பு அதிகரித்தது. இன்று, தமிழகத்தில் சவுக்கு, மலைவேம்பு, தீக்குச்சி மரம், சுபாபுல், குமிழ், கடம்பு ஆகிய மரங்களின் வளர்ப்பு அதிகரித்துள்ளது. இன்றளவில் வேளாண் காடுகள், 25 ஆயிரம் விவசாயிகள் பராமரிப்பில்,70 ஆயிரம் ஏக்கரில் வளர்க்கப்படுகின்றன.மர உற்பத்தித்திறன் ஒரு எக்டருக்கு, 100 டன் என்ற அளவில் இருந்து, 150 டன்னாக அதிகரித்துள்ளது. தவிர அறுவடை செய்தல் என்ற நிலைமாறி, மூன்று ஆண்டுகளிலேயே மரங்களை அறுவடை செய்யும் நிலை உருவாகியுள்ளது. மரங்கள் வாங்கும் நிறுவனங்களும் குறைந்த பட்ச விலையை, நிர்ணயித்த காலத்துக்குள் வழங்க வழிவகை செய்யப்பட்டதால் விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.தற்போது, இத்திட்டம் நிறைவு பெற்றுள்ள நிலையில், இதுநாள் வரையில் ஏற்படுத்தப்பட்ட ஒருங்கிணைப்புத்தளம், விவசாயிகளுக்கும், மரம் வளர்ப்புக்கும் தொடர்ந்து பயன்பட வேண்டும் என்ற நோக்கத்தில், வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முயற்சியில், 'மரத்தொழிற்சாலை சார்ந்த வேளாண் காடுகள் கூட்டமைப்பு' உருவாக்கப்பட்டுள்ளது.இக்கூட்டமைப்பின் துவக்கவிழா, வனக்கல்லூரி

மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் வேளாண் பல்கலை துணைவேந்தரால் இன்று துவக்கி வைக்கப்படுகிறது. கூடுதல் முதன்மை தலைமை வனபாதுகாவலர் கிருஷ்ணகுமார், சிறப்பு அழைப்பாளராக பங்கேற்கிறார். தவிர நபார்டு வங்கி மேலாளர், இந்திய வேளாண் ஆராய்ச்சி கழக பேராசிரியர்கள், பல்கலை துறை இயக்குனர்கள் பங்கேற்கின்றனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**




நேற்று முன்தினம் உலகம் முழுவதிலும் உலக வன நாள் கொண்டாடப்பட்டது. எந்த நாடு, எந்த மாநிலம் என்றாலும், அதன் மொத்த பரப்பில் மூன்றில் ஒரு பங்கு வனப் பரப்பாக இருக்க வேண்டும் என்பது நியதி. ஆனால், இந்தியாவிலும், குறிப்பாக தமிழ்நாட்டிலும் இந்த அளவு வனப்பரப்பு இல்லாதததுதான் வருந்தத்தக்கது. மரக்கன்றுகளை

புதிதாக நடுவதிலும், ஏற்கனவே இருக்கும் வனப்பரப்பை இன்னும் அடர்த்தியாக்குவதிலும், மத்திய, மாநில அரசுகள் தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது. உலக வன நாள் கொண்டாடப்பட்ட நாளுக்கு சில நாட்களுக்கு முன்பு, சமீபத்தில் இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் வந்த அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, டெல்லியில் மகாத்மா காந்தி நினைவிடம் இருக்கும் ராஜ்காட் பகுதியில் நட்டிய மரக்கன்று இலை எல்லாம் உதிர்ந்து, காய்ந்து குச்சாக நிற்கும் படம் வடமாநில பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்தது பலரையும் வேதனையில் ஆழ்த்தியது. அதேபோல, 'தினத்தந்தி'யில் திருவான்மியூர் கடற்கரையில் தமிழக வனத்துறை சார்பில் நடப்பட்ட மரக்கன்றுகள் வெறும் குச்சிகளாக பரிதாப தோற்றத்தோடு நிற்கும் காட்சி வெளியிடப்பட்டிருந்தது. அரசை பொறுத்தமட்டில், மரக்கன்றுகளை நடுவதில் எந்த குறையும் வைக்கவில்லை. வனப்பரப்பும் சற்று உயர்ந்து இருக்கிறது. அதேபோல, நடிகர் விவேக் போன்று பல சமூக ஆர்வலர்கள் ஆங்காங்கு மரக்கன்றுகளை நடுவதிலும் ஆர்வம் காட்டி வருகிறார்கள். மரக்கன்றுகள் நட வேண்டும் என்பதற்கான முக்கியத்துவம் எல்லோருக்கும் தெரிகிறது. ஆனால், நடப்பட்ட மரக்கன்றுகள் எல்லாம் என்ன ஆனது என்பதை யாரும் பார்ப்பதில்லை. மரக்கன்றுகளை நட்ட நாளில் தண்ணீர் ஊற்றுவதோடு கடமை முடிந்துவிட்டது என்றே கருதப்படுகிறது. தமிழக அரசை பொறுத்தமட்டில் கடந்த 3 ஆண்டுகளில்

மட்டும் ஒரு கோடியே 95 லட்சம் மரக்கன்றுகள் ரூ.175 கோடியே 89 லட்சம் செலவில் நடப்பட்டுள்ளது. வருகிற நிதியாண்டில் மேலும் 67 லட்சம் மரக்கன்றுகள் ரூ.53 கோடியே 72 லட்சம் செலவில் நடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதுபோல, மற்ற துறைகள், தனியாரெல்லாம் சொன்ன கணக்குகளை பார்க்கும் போது தமிழ்நாடு பசுஞ்சோலையாக, எங்கு பார்த்தாலும் பச்சைப்பசேல் என்று மரங்கள்தான் தென்பட்டிருக்க வேண்டும். ஆனால், நிலைமை அப்படி இல்லை. மரக்கன்றுகளை நடுவதற்கு எல்லோரும் பணம் செலவழிக்கிறார்கள். ஆனால், அதை பராமரிக்கும் விஷயத்தில் மட்டும் மாற்றாந்தாய் மனப்பான்மை உருவெடுத்து விடுகிறது. மரக்கன்றுகள் தானாக வளர்ந்துவிடுவதில்லை. ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு கண்டிப்பாக தண்ணீர் ஊற்றி, உரமிட்டு, கொத்திவிட்டு, கால்நடைகள் கடித்து குதறிவிடாதபடி பராமரிக்க வேண்டும். இதற்கு உரிய நிதியோ, கவனமோ செலுத்தப்பட்டால்தான், நடப்பட்ட மரக்கன்றுகள் பெரும்பாலும் வளர்ந்து மரமாகும். எனவே நட்டது கணக்கில் இருக்கிறது, எத்தனை பிழைத்து வளர்ந்து இருக்கிறது என்ற கணக்கையும் எடுத்தால் இனி எடுக்க வேண்டிய நடவடிக்கைக்கு துணையாக இருக்கும். நடிகர் விவேக்கை பொருத்தமட்டில் பள்ளி, கல்லூரிகளில் நடும் மரக்கன்றுகளை மாணவர்கள் தொடர்ந்து பராமரித்து வளர்க்க வலியுறுத்துகிறார். இதுபோல கிராம மக்களையும் பொறுப்பெடுக்க வைத்துவிடுகிறார்.

இனியாவது மரக்கன்றுகளை நடும் ஆர்வத்திற்கு இணையாக, கவனத்திற்கு இணையாக பராமரிப்புக்கும் முக்கியத்துவம் கொடுத்து அதற்குரிய நிதிகளை ஒதுக்கி மரக்கன்றுகள் மரமாகும் வரை, அதற்குரிய பொறுப்பெடுத்துக்கொண்டால்தான் தமிழ்நாடு பசுமை மிகுந்த தமிழ்நாடாக மாறும்.

## அட்மா திட்டத்தில் மீன் வளர்ப்பு இடுபொருட்கள் வழங்குதல்



தா.பழூர் வட்டாரத்தில் அட்மா திட்டத்தின்கீழ் மீன்வளத்துறையின் மூலம் கோடாலிகருப்பூர் கிராமத்தில் பண்ணைக்குட்டை அமைத்துள்ள கலியபெருமாள் என்கிற விவசாயிக்கு கலப்பின மீன்குஞ்சுகளான கட்லா, ரோகு, மிர்கால், சாதா கெண்டை, சில்வர், புல் கெண்டை போன்ற உயர்ரக மீன்குஞ்சுகள் மற்றும் மீன் உணவு என ரூ.4 ஆயிரம் மதிப்புள்ள இடுபொருட்களை வேளாண்மை உதவி இயக்குனர் பழனிச்சாமி மற்றும் மீன்வள ஆய்வாளர் ஞானம் ஆகியோர் வழங்கினர். மீன்வள மேற்பார்வையாளர் அப்துல் ரஹீம் மற்றும் அட்மா திட்ட வட்டார

தொழில்நுட்ப மேலாளர் சகாதேவன் ஆகியோர் அப்போது உடன் இருந்தனர்.

**விவசாயிகள் சிறு தானியங்களை பயிரிட்டால் தண்ணீர் தேவை குறையும் கருத்தரங்கில் கண்காணிப்பு பொறியாளர் பேச்சு**



விவசாயிகள் சிறு தானி யங்களை பயிரிட்டால் தண்ணீர் தேவை குறை யும் என்று பொள்ளாச் சியில் நடந்த கருத்தரங் கில் கண்காணிப்பு பொறி யாளர் இளங்கோவன் கூறினார்.

கருத்தரங்கு

பொள்ளாச்சி பி.ஏ.பி. வளாகத்தில் நேற்று உலக வன நாள் மற்றும் உலக தண்ணீர் தினம் கடைபிடிக்கப் பட்டது. இதையொட்டி அங்கு விவ சாயிகளுக்கு கருத்தரங்கு நடை பெற்றது. இதற்கு செயற் பொறியாளர் செல்வ ராஜ் முன்னிலை வகித்தார்.முது நிலை வரைதொழில் அலுவலர் துரைசாமி, உதவி செயற் பொறியாளர்கள் லீலா, நடராஜன் ஆகியோர் கலந்து கொண்டு பேசினார்கள்.கருத்தரங்கில் தலைமை தாங்கிய பொதுப்பணித்துறை கண்காணிப்பு பொறியாளர் இளங்கோவன் பேசும்

போது கூறியதாவது:-நாளுக்கு நாள் தண்ணீர் தேவை அதிகரித்து வருகிறது. அதே போல் தண்ணீர் மாசு பாடும் அதிகமாக உள்ளது. தண்ணீரை சுத்திகரிப்பு செய்து மீண்டும், மீண்டும் பயன்படுத்துகிறோம். தற்போதைய சூழ்நிலையில் 50 சதவீதம் நிலத்தடி நீரை தான் நம்பி இருக்கவேண்டிஉள்ளது. தேங்காய்எண்ணெய் இயற்கைக்கு எதிரான செயல்கள் அதிகமாக நடைபெற்று வருகின்றன. இவற்றை தடுக்க வேண்டும். தவறினால் எதிர்காலத்தில் கடும் விளைவுகளை சந்திக்க வேண்டி இருக்கும்.உணவு பழக்க, வழக்கங்கள் மாறி விட்டன. சமையலுக்கு அந்த காலத்தில் தேங்காய் எண்ணெயை தான் பயன் படுத்துவார்கள். தற்போது தேங்காய் எண்ணெய்யை தான் பயன் படுத்துவோம் என்று விவசாயிகள் அனை வரும் உறுதி ஏற்க வேண்டும். அப் போது தென்னை விவசாயம் உங்களை செழிப் பாக வாழ வைக்கும். சிறு தானியங்கள் தண்ணீர் தொடர்பாக மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். தண்ணீரை சிக்கனமாக பயன் படுத்த வேண்டும். விவசாயிகள் கம்பு, சோளம் போன்ற தானிய பயிர்களை பயிரிட்டால் தண் ணீர் தேவை குறைவாக இருக் கும். சிறுதானியங்கள் உடலுக்கு மிகவும் நல்லது.முக்கியமாக விவசாயிகள் ரசாயன உரத்துக்கு பதில் இயற்கை உரத்துக்கு மாற வேண்டும். இதன் மூலம் மண் வளம் காக்கப்படும். சொட்டு நீர் பாசனத்தின் மூலம் தண் ணீரை சிக்கனமாக பயன் படுத்த முடியும். மேலும் மழை நீரை சேமிக்க வேண்டும். மரங்

களை வளர்க்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.இவ்வாறு அவர் கூறினார்.இதில் விவசாயிகள் மெடிக் கல் பரமசிவம், சின்னசாமி உள்பட பலர் கலந்து கொண் டனர்.முன்னதாக உதவி செயற் பொறியாளர் கிருஷ் ணன் வரவேற்று பேசினார். முடிவில் உதவி பொறியாளர் சக்திகுமார் நன்றி கூறினார்.

## பரமத்திவேலூர் பகுதியில் 4 புதிய கால்நடை மருந்தகம் கட்டும் பணி அமைச்சர் தங்கமணி தொடங்கி வைத்தார்


நகப்பாளையத்தில் புதிய கால்நடை மருந்தகம் அமைப்பதற்கான பணியை அமைச்சர் தங்கமணி தொடங்கி வைத்தபோது எடுத்த படம். அருகில் பி.ஆர்.சுந்தரம் எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் கே.பி.பி.பாஸ்கர், தனியரசு மற்றும் பலர் உள்ளனர்.

பரமத்திவேலூர் பகுதியில் ரூ.96 லட்சம் மதிப்பில் 4 புதிய கால்நடை மருந்தகம் கட்டப்பட உள்ளது. இதற்கான பணிகளை அமைச்சர் தங்கமணி நேற்று தொடங்கி வைத் தார்.கால்நடை மருந்தகம் நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட கொத்தமங்கலம், நகப் பாளையம், பாண்டமங்கலம் மற்றும் வெங்கரை ஆகிய 4 இடங்களில் கால்நடை பராமரிப்புத்துறையின் சார் பில் புதிதாக கால்நடை மருந் தகங்கள் கட்டும் பணியின் தொடக்கவிழா நடைபெற்றது. நாமக்கல் பாராளுமன்ற உறுப்பினர் பி.ஆர்.சுந்தரம்,

நாமக்கல் சட்டமன்ற உறுப் பினர் கே.பி.பி.பாஸ்கர், பரமத்தி வேலூர் சட்டமன்ற உறுப்பினர் தனியரசு ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவில் தமிழக தொழில்துறை அமைச்சர் தங்கமணி, கலந்துகொண்டு நபார்டு திட்டத்தின் ஊரக உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் தலா ரூ.24 லட்சம் வீதம் ரூ.96 லட்சம் மதிப் பீட்டில்¢ 4 புதிய கால்நடை மருந்தக கட்டிடம் கட்டுவதற் கான பணிகளை பூமிபூஜை செய்து தொடங்கி வைத் தார்.நிகழ்ச்சிகளில் கபிலர்மலை ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் ராஜேந்திரன், பரமத்தி ஊராட்சி ஒன்றியக் குழு தலைவர் சின்னுசாமி, மாவட்ட ஊராட்சிகுழு உறுப்பினர் சாமிநாதன், வேலூர் பேரூராட்சி தலைவர் வேலுச்சாமி, பொத்தனூர் பேரூராட்சி தலைவர் நாராயணன், பாண்டமங்கலம் பேரூராட்சி தலைவர் பானுமதி பாலகிருஷ்ணன், வெங்கரை பேரூராட்சி தலைவர் நித்யகுமாரி விஜய குமார் மற்றும் ஊராட்சி மன்ற தலைவர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், அரசுத்துறை அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர். முன்னதாக திருச்செங்கோடு உதவி கலெக்டர் சுமன் வரவேற்றார். முடிவில் பரமத்திவேலூர் தாசில்தார் மாதேஸ்வரி நன்றி கூறினார்.திருச்செங்கோடு : திருச்செங்கோடு நகராட் சியில் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின்கீழ் கொள்ளப்பட்டி வீட்டுவசதி வாரிய குடியிருப்பு, மகாதேவ புரம், அம்பேத்கார் நகர், சந்தைப்பேட்டை மற்றும் கூட்டப்பள்ளி ஆகிய 5 இடங்களில் ரூ.23.70 லட்சம் மதிப்பில்

மேல்நிலை நீர்த் தேக்க தொட்டிகள் கட்டும் பணிகளும் குடிநீர் குழாய் பதித்து பொதுமக்களுக்கு குடிநீர் வினியோகிக்கும் பணிகளின் தொடக்க விழா நடைபெற்றது. விழாவிற்கு நாமக்கல் பாராளுமன்ற உறுப்பினர் பி.ஆர்.சுந்தரம் முன்னிலை வகித்தார். விழாவில் தொழில்துறை அமைச்சர் பி.தங்கமணி கலந்து கொண்டு புதிய குடிநீர் திட்டப்பணிகளை பூமிபூஜை யிட்டு தொடங்கி வைத்தார்.விழாக்களில் திருச்செங் கோடு உதவி கலெக்டர் டாக்டர் சுமன், திருச்செங் கோடு நகர்மன்றத் தலைவர் பொன்சரஸ்வதி, டி.சி.எம்.எஸ். தலைவர் கந்தசாமி, பொன்னுசாமி, திருச்செங் கோடு நகராட்சி ஆணையாளர் (பொறுப்பு) சுகுமார், உதவி பொறியாளர் பிரகாஷ், இளநிலை பொறியாளர் பரமசிவம், நகரமைப்பு அலு வலர் ரவீந்திரன் உட்பட நகராட்சி அலுவலர்கள், நகர்மன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், அரசுத்துறை அலு வலர்கள், பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## <u>கோத்தகிரியில் மழை பசுமையாக காட்சியளிக்கும் தேயிலை தோட்டங்கள்</u>



கோத்தகிரியில் பெய்த மழையின் காரணமாக தேயிலை தோட்டங்கள் பசுமையாக காட்சியளிக்கின்றன. பனிப்பொழிவு - நீலகிரி மாவட்டத்தில் கடந்த டிசம்பர் மாதம் இறுதி யில் இருந்து பிப்ரவரி மாதம் கடைசி வாரம் வரை பகல் நேரங்களில் கடுமையான வெயிலும், இரவு நேரங்களில் கடுமையான பனிப்பொழிவும் நிலவி வந்தது. இதனால் தேயிலை தோட்டங்கள் மற்றும் விவசாய நிலங்கள்வறண்டு காணப்பட்டன.இதேபோல் வனப்பகுதியில் கடும் வறட்சி நிலவியதால் வன விலங்குகள் உணவு மற் றும் குடிநீர் தேடி பல்வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்து சென்றன. மேலும், சமவெளி பகுதிகளை போன்று நீலகிரி மாவட்டத்தில் கடும் வெயில் நிலவியதால் பொதுமக்கள் குடிநீருக்காக அவதிப்பட்டு வந்தனர். பசுமையான தேயிலை தோட்டங்கள். இந்த நிலையில் கோத்தகிரி மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் கடந்த சில வாரங் களாக பகல் நேரங்களில் லேசான வெயிலும், இரவில் பரவலாக மழையும் பெய்தது. இதனால் நீர்நிலைகளில் நீர் வரத்து சற்று அதிகமாககாணப் பட்டதுடன், கோத்தகிரி, எஸ். கைக்காட்டி, சோலூர் மட்டம், ஒன்னட்டி உள்ளிட்ட பகுதி களில் உள்ள தேயிலை செடி கள் பச்சை கம்பளம் விரித்தாற் போல் பசுமையாக காட்சிய ளிக்கின்றன. மேலும் அவ்வப்போது தொடர்ந்து மழை பெய்துவருவ தால் தேயிலை செடிகளுக்கு விவசாயிகள் உரமிடுதல் பணி யையும் மேற்கொண்டு வருகின் றனர். கடந்த சில வாரங்களுக்கு

முன்பு நிலவி வந்த வறட்சியான காலநிலையால் வேலை இழந்து பாதிக்கப்பட்டு இருந்த தேயிலை தோட்ட தொழி லாளர்கள் தற்போது மீண்டும் வேலைக்கு சென்று வருவதால் தோட்ட தொழிலாளர்கள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

## <u>கால்நடை பராமரிப்பு துறை மூலம் மானிய விலையில் உலர் தீவனம் வழங்கப்படும் விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டத்தில் தகவல்</u>



கால்நடை பராமரிப்பு துறை மூலம் மானிய விலையில் உலர் தீவனம் வழங்கப்படும் என்று விவ சாயிகள் குறை தீர்க்கும் கூட்டத்தில் தெரிவிக்கப் பட்டது.விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் நீலகிரி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட வருவாய் அலுவலர் பாஸ்கர பாண்டியன் தலை மையில் நடைபெற்றது. இதில், விவசாய சங்கங்கள், தோட்டக் கலை இணை இயக்குனர் மற் றும் இதர துறையினை சார்ந்த அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.முன்னதாக விவசாய சங் கங்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகள் உரிய துறை அலுவலர்களுக்கு அனுப்பப்

பட்டு விவரம் பெறப்பட்டன. பின்னர் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 42 கோரிக்கைகள் மீது விவாதிக்கப்பட்டு கீழ்க் கண்ட விவரங்கள் அளிக்கப் பட்டன.இலவச மின் இணைப்பு ஊட்டி ஆவின் மூலம் 2015- 17-ம் ஆண்டிற்கான பால் சேக ரம், வினியோகம் மற்றும் கால் நடை மருத்துவம் மற்றும் களப் பணியாளர்களுக்கென 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒப் பந்தப்புள்ளியின் அடிப்படை யில் நடவடிக்கை எடுக்கப்படு கிறது. மேலும், ஆவின் பாலகங் களில் பால் பொருட்கள் மட் டும் வழங்கப்பட்டு சுத்தமாக வைக்க அறிவுரை வழங்கப் பட்டு உள்ளது. இலவச விவசாய மின் இணைப்பு வேண்டி பெறப் படும் விண்ணப்பங்கள் செயற் பொறியாளர் அலுவலகத்தில் பதிவு செய்து அரசு குறியீடு பெறப்படும் போது மூப்பு அடிப்படையில் மின் இணைப்பு வழங்கப்படும்.

## <u>மானிய விலையில் உலர் தீவனம்</u>

கால்நடை பராமரிப்பு துறை மூலம் நீலகிரி மாவட்டத்தில் கால்நடை வளர்ப்பவர்களுக்கு மானிய விலையில் உலர் தீவ னம் வழங்கப்படும். மண்புழு உர கூடாரம் அமைக்க முன் வரும் விவசாயிகளுக்கு மானி யத்துடன் மண்புழு உரக் கூடாரம் அமைக்க தோட்டக் கலை உதவி இயக்குனரை அணுகி உதவி பெற்றுக் கொள்ள வேண்டும். தோட்டக்கலைத்துறையின் மூலம் ரசாயன உரம் மற்றும் பூச்சி மருந்துகள் பயன்பாட் டினை குறைத்து இயற்கை உரங்களை அதிகளவில் பயன் படுத்தும் வகையில் மானிய திட்டங்கள் செயல்படுத்தப் படும். மேலும்

குறைந்த பரப் பில் அதிக மகசூல் பெற பசு மைக்குடில் அமைத்தல்,கலப்பு பண்ணை அமைத்தல், விவ சாய விளைபொருட்களில் இருந்து உரப்பொருட்கள் தயார் செய்தல், திருந்தியமுறை யில் தீவன சாகுபடி மேற் கொள்ளுதல், தேயிலையில் தரமான கொளுந்து எடுத்தல் போன்றவை நிரந்தர வருவாய் பெற வழிவகை உள்ளது.எல்.இ.டி. விளக்குகள் ஊட்டி நகராட்சிக்குட்பட்ட கார்டன் முதல் பஸ் நிலையம் வரை தற்பொழுது மின்சார தெரு விளக்குகள் அனைத்தும், எல்.இ.டி. விளக்குகளாக மாற்ற நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது. கேத்தி ஆரம்ப சுகா தார நிலையம் அருகில் நெடுஞ் சாலை துறை இடத்தில் கட் டப்படும் பஸ் நிலையத்தை நில அளவை செய்ய நடவ டிக்கை எடுக்கப்பட்டு உள் ளது. நீலகிரி மாவட்ட விவசாயி களின் விளை நிலங்களில் ஒட்டிய பகுதிகளில் வன விலங்குகள் வருவதை வனத் துறையின் மூலம் அனைத்து பகுதிகளிலும் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.மண் அரிமானத்தை தடுக்க மலைப்பகுதி மேம்பாட்டு திட்டம் தேர்வு செய்யப்பட்டு உள்ள நீர்வடி பகுதியில் கம்பி வரை தடுப்பணைகளும், நீர் வளம் பெருக்க தடுப்பணை களும் கட்டப்பட்டு வருகிறது என்ற விபரம் தெரிவிக்கப் பட்டது. மேலும் விவசாயி களின் பொது கோரிக்கைகளும் விவாதிக்கப்பட்டு உரிய விவரம் தெரிவிக்கப்பட்டது.

# <u>மிளகாய் வத்தல் விற்பனை விறுவிறுப்பு வெளிமாவட்ட வியாபாரிகள் போட்டிப்போட்டு வாங்கிச்செல்கின்றனர்</u>



கொளத்தூர் பகுதியில் விளைச்சல் அமோகமாக உள்ளதால் மிளகாய் வத்தல் விற்பனை விறுவிறுப்பாக நடந்து வருகிறது. வெளிமாவட்ட வியாபாரிகள் போட்டிப்போட்டு வாங்கிச்செல்கின்றனர்.

மிளகாய்வத்தல்

சேலம் மாவட்டம் மேட்டூரை அடுத்த கொளத்தூர் பகுதியில் ஆண்டுதோறும் வத்தலுக்கு பயன்படுத்தப்படும் மிளகாய்கள் சாகுபடி செய்வது வழக்கம். காவிரி கரையோரத்தில் உள்ள இந்த பகுதியில் விளைவிக்கப்படும் மிளகாய் மிகுந்த காரத்துடனும், மணத்துடனும் இருப்பதால் கொளத்தூர் மிளகாய் வத்தலுக்கு மார்க்கெட்டில் நல்ல மவுசு உண்டு.இதனால் கொளத்தூர் மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளான கோவிந்தபாடி, கோட்டையூர், கத்திரிப்பட்டி, கருங்கல்லூர், மூலக்காடு, வெள்ளக்கரட்டூர், சேத்துக்குளி, சத்யாநகர், தானமூர்த்திகாடு ஆகிய ஊர்களில் நூற்றுக்கணக்கான ஏக்கரில் மிளகாய் சாகுபடி செய்யப்பட்டு உள்ளது. 4 மாதம் பலன் தரக்கூடிய இந்த மிளகாய்க்கு பிப்ரவரி மாதம்

முதல் மே மாதம் வரை சீசன் காலங்களாகும்.விளைச்சல் அமோகம் அதன்படி, இந்த பகுதிகளில் விளைவிக்கப்பட்டு உள்ள செடிகளில் மிளகாய் விளைச்சல் அமோகமாக உள்ளது. இப்படி விளையும் மிளகாய்களை விவசாயிகள் செடிகளிலேயே பழுக்க விட்டு விடுகிறார்கள். நன்றாக சிவந்தபிறகு அந்த மிளகாய்களை அறுவடை செய்து காயவைத்து வத்தலாக விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். கொளத்தூரில் வாரந்தோறும் செவ்வாய்க்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமைகளில் சந்தை கூடுகிறது. இந்த சந்தைக்கு குறிப்பாக செவ்வாய்க்கிழமை கூடும் சந்தைக்கு விவசாயிகள் மிளகாய் வத்தலை கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர். இந்த மிளகாய் வத்தலை சேலம் மட்டுமின்றி கோவை, ஈரோடு, திருப்பூர் மாவட்டங்களை சேர்ந்த வியாபாரிகளும் போட்டிப்போட்டுக்கொண்டு வாங்கிச் செல்கிறார்கள். இந்த சந்தையில் விற்பனை விறுவிறுப்பாக நடந்து வருகிறது. கிலோ ரூ.85-க்கு விற்பனை

இதுகுறித்து விவசாயிகள் கிருஷ்ணசாமி, தமிழ்ச்செல்வன் ஆகியோர் கூறியதாவது: கொளத்தூர் பகுதியில் விளைவிக்கப்படும் மிளகாய் வத்தல் மிகுந்த காரத்துடன் இருக்கும். இதற்கென தனி மணமும் உண்டு. இதனால் உள்ளூர் வியாபாரிகள் முதல் வெளிமாவட்ட வியாபாரிகள் வரை சந்தைக்கு வந்து மிளகாய் வத்தலை போட்டிப்போட்டுக்கொண்டு வாங்கிச்செல்கின்றனர்.

இன்று (நேற்று) கூடிய சந்தையில் மிளகாய் வத்தல் கிலோ ரூ.85 முதல் ரூ.95 வரை விற்பனை ஆனது. நகரங்களில் உள்ள பல்பொருள் விற்பனை அங்காடிகளுக்கும் இங்கு மிளகாய் வத்தல் கொள்முதல் செய்யப்படுகிறது. இவர்கள் வாங்கும் மிளகாய் வத்தலை 16 கிலோ முதல் 20 கிலோ வரை பிடிக்கும் மூட்டைகளாக கட்டி லாரிகள் மூலம் அனுப்பி வைக்கிறோம். இந்த மாதம் விளைச்சல் அமோகமாக இருப்பதால் விற்பனையும் விறுவிறுப்பாக நடந்து வருகிறது. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

**<u>உத்தமபாளையம் பகுதியில் நெல் கொள்முதல் விலை உயர்வு வெளி மாவட்ட வியாபாரிகள் வருகை எதிரொலி</u>**



உத்தமபாளையம்,

உத்தமபாளையம் பகுதி களுக்கு வெளிமாவட்ட வியாபாரிகள் வருகை அதிகரித்து உள்ளதால் நெல் கொள்முதல் விலை உயர்ந்து உள்ளது.

<u>நெல்சாகுபடி</u>

தேனி மாவட்டத்தில் லோயர்கேம்ப் முதல் பழனி செட்டிபட்டி வரை உள்ள பகுதிகள் கம்பம் பள்ளத்தாக்கு பகுதியாகும். முல்லைப் பெரியாறு

அணையின் நீரை நம்பி இங்கு சுமார் 14 ஆயிரத்து 707 ஏக்கர் இருபோக நெல் சாகுபடி நடந்து வருகிறது. கடந்த ஆண்டில் பெய்த மழையால் முல்லைப் பெரியாறு அணையின் நீர் மட்டம் 142 அடியாக உயர்ந்தது. இதன் பலனாக கம்பம் பள்ளத்தாக்கு பகுதிகளில் இருபோக நெல் சாகுபடி வெற்றிகரமாக முடிந்து உள் ளது. கம்பம், காமயகவுண்டன் பட்டி, கூடலூர், சுருளிப்பட்டி உள்ளிட்ட ஊர்களில் 2-ம் போகம் நெல் அறுவடை பணி முடிந்து விட்டன. இப்பகுதி களில் கோடைகால விவசாயத் திக்காக வயல்களில் ஊழவுப் பணி செய்து வருகின்றனர்.

விலைஉயர்வு

உத்தமபாளையம், சின்ன மனூர், மார்க்கையன் கோட்டை, குச்சனூர் உள்ளிட்ட ஊர்களில் 2-ம் போக நெல் அறுவடை பணி கள் தற்போது தீவிரமாக நடந்து வருகிறது. கடந்த வாரம் இப்பகுதிகளில் 61 கிலோ எடையுள்ள ஒரு மூட்டை நெல் ரூ.800-க்கு கொள்முதல் செய்யப்பட்டது. தற்போது மதுரை, திண்டுக்கல், சிவகங்கை உள்ளிட்ட வெளி மாவட்டங்களில் இருந்து வியாபாரிகள் வந்து நெல் கொள்முதல் செய்கின்றனர். வெளி மாவட்ட வியாபாரி கள் வருகையால் நெல் கொள் முதல் விலை உயர்ந்து உள்ளது. கடந்த வாரம் ரூ.800-க்கு கொள்முதல் செய்யப்பட்ட நிலையில், ஒரு மூட்டை நெல் தற்போது ரூ.830-க்கு கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. நெல் கொள்முதல் விலை உயர்ந்து உள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

## திருவள்ளூர் மாவட்டத்தில் விவசாயிகளுக்கு தட்டுப்பாடின்றி உரம் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் கலெக்டர் பேச்சு




திருவள்ளூர்

திருவள்ளூர் மாவட்டத்தில் விவசாயிகளுக்கு தட்டுப்பாடின்றி உரம் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கலெக்டர் கொ.வீரராகவராவ் பேசினார்.

திட்டக்குழு கூட்டம்

திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் மாவட்ட திட்டக்குழு கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு மாவட்ட ஊராட்சி மற்றும் திட்டக்குழு தலைவர் ரவிச்சந்திரன் தலைமை தாங்கினார். மாவட்ட ஊராட்சி செயலாளர் மைதிலி முன்னிலை வகித்தார். திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் கொ.வீரராகவராவ் கலந்து கொண்டு கூட்டத்தை தொடங்கி வைத்தார்.இதில் கல்வித்துறை, அனைவருக்கும் கல்வி இயக்கம், வேளாண்மைத்துறை, சுகாதாரத்துறை, போக்குவரத்துத்துறை, தோட்டக்கலைத்துறை உள்பட பல துறைகளில் இந்த ஆண்டு

செயல்படுத்தப்பட்ட திட்டங்கள், செயல்படுத்தப்பட உள்ள திட்டங்கள் குறித்து ஆய்வு செய்தார்.

## காய்கறி தோட்டம்

பின்னர் கலெக்டர் கொ.வீரராகவராவ் கூட்ட அரங்கில் பேசும்போது கூறியதாவது:–

திருவள்ளூர் மாவட்டத்தில் வரும் கல்வி ஆண்டை சிறப்புடன் தொடங்க பாடப்புத்தகங்களை விரைவில் வழங்க வேண்டும். பருவமழை குறைந்தாலும் நெல் சாகுபடியை உயர்த்தி விவசாயிகள் சிறந்த முறையில் பயிரிட ஊக்கம் அளிக்க வேளாண்மைத்துறை நடவடிக்கையில் ஈடுபட வேண்டும். விவசாயிகளுக்கு சூரியஒளி மோட்டார்களை வழங்கிட வேண்டும். விவசாயிகளுக்கு தட்டுப்பாடின்றி உரம் கிடைத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும். கர்ப்பிணி பெண்களுக்கு முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி உரிய காலத்தில் வழங்கிட வேண்டும், மாவட்டத்தில் அனைத்து போக்குவரத்து தேவைகளையும் பூர்த்தி செய்ய தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (விழுப்புரம்) நடவடிக்கை எடுக்க வேண்டும். பொதுமக்கள் தங்கள் வீடுகளில் தோட்டங்களை வளர்க்க வேண்டும்.இவ்வாறு அவர் கூறினார். இந்த கூட்டத்தில் மாவட்ட திட்டக்குழு உறுப்பினர்கள் மற்றும் ஏராளமான அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**அதிசய பரங்கிக்காய்**

திருவெண்ணெய்நல்லூர், : திருவெண்ணெய்நல்லூர் அணைக்கட்டு சாலையை சேர்ந்தவர் சுப்ரமணி மகன் மூர்த்தி(42). இவர் பெட்டிகடை வைத்துள்ளார்.இவருக்கு சொந்தமான தோட்டத்தில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு வாழை, முருங்கை பயிர் செய்திருந்தார். ஊடுபயிராக பரங்கிக்காய் பயிர் செய்திருந்தார்.கடந்த சில தினங்களுக்கு முன்பு பரங்கிக்காய் காய்த்திருந்தது. அதில் ஒரு காய் மட்டும் வழக்கத்திற்கு மாறாக சொரக்காய் போல் நீண்டு காணப்பட்டது. அதன் நீளம் 3 அடி உள்ளது. இதனை அப்பகுதியினர் ஆச்சரியத்துடன் பார்த்து சென்றனர்.

**நவீன கரும்பு சாகுபடி பயிற்சி முகாம்**

விக்கிரவாண்டி, : முண்டியம்பாக்கம் சர்க் கரை ஆலை சார்பில் கரும்பு விவசாயிகளுக்கு நவீன கரும்பு சாகுபடி குறித்த பயிற்சி முகாம் நடந்தது. ஆலை அசோசியேட் உப தலைவர் கார்த்திகேயன் தலைமை தாங்கினார். மேனேஜர் ராஜேந்திரன் முன்னிலை வகித்தார். விரிவாக்க மேனேஜர் சிவாஜிகணேசன், உழவியல் நிபுணர் வேல்முருகன், பூச்சியியல் நிபுணர்

பூவரசி ஆகியோர், நவீன முறையில் சொட்டுநீர் பாசனம், கட்டைகரும்பு சாகுபடி, உயிர் உரங்கள் பயன்பாடு மற்றும் இயந்திரங்கள் உபயோகித்தல், பூச்சி தாக்குதல் கட்டுப்படுத்தும் முறை குறித்து விளக்கமளித்தனர்.மேலும் வெங்கந்தூரை சேர்ந்த விவசாயி கிருஷ்ணமூர்த்தி ஏக்கருக்கு 80 டன் மகசூல் செய்த இவரை அதிகாரிகள் பாராட்டினர். இதில் விரிவாக்க அலுவலர்கள் பிரவின்குமார், வாசுதேவன் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**<u>நொய்யல் ஆற்றில் மாசுநீர் கலப்பதை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்</u>**

க.பரமத்தி, : நொய்யல் ஆற்றில் மாசு பட்ட தண்ணீரை தடுக்க உரிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தி நடவடிக்கை எடுக்கப்படும் என அரவக்குறிச்சி எம்எல்ஏ கே.சி.பழனிசாமி பொதுமக்களிடம் உறுதியளித்தார். கரூர் மாவட்டம் க.பரமத்தி ஒன்றியம் அத்திபாளையம் ஊராட்சி வலையாபளையத்தில் எம்எல்ஏ தொகுதி மேம்பாட்டு நிதி யில் கட்டப்பட்ட சமுதாய கூடத்தை அரவக்குறிச்சி எம்எல்ஏ கே.சி.பழனிசாமி திறந்து வைத்தார். அப்போ து கூடியிருந்த பொதுமக் கள், கடந்த சில நாட்களாக நொய்யல் ஆற்றில் தண்ணீர் பச்சை நிறத்தில் வருகிறது. இதனால் அஞ்சூர், கார்வழி, துக்காச்சி, முன்னூர், அத்திபாளையம், கரூர் ஒன்றியத் தில் நொய்யல் ஆறு வழி யாக காவிரி நீருடன் கலப்பதால் காவிரி ஆறும் மாசு பட்டு வருகிறது. காவிரி ஆற்றை நம்பியுள்ள கரூர் மாவட்டம் மட்டுமல்லாது பிற மாவட்டங்களில் மாசு பட்ட நீரால்

விவசாய கிணறுகளும் தரம் மாறிவிட்டது. இதனாலம் விவசாய பயிர்கள் சரிவர வளராமல் காய்ந்து போகிறது.மேலும் பொதுமக்களுக்கு உடல் தொந்தரவுகள் மற்றும் கால்நடைகளுக்கு வயிற்றுப்போக்கு ஏற்படும் அபாய நிலை உள்ளது. இதனை தடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர். இதனையடுத்து நொய்யல் ஆற்றில் நிறம்மாறி வரும் மாசுபட்ட தண்ணீரை எம்எல்ஏ கேசி.பழனிசாமி, ஒன்றிய செய லாளர் கருணாநிதி ஆகி யோர் பார்வையிட்டனர். அதன் பின்னர் எம்எல்ஏ கே.சி.பழனிசாமி மக்களிடம் கூறுகையில், திருப்பூர் மாவட்டத்திலிருந்து நொய்யல் ஆறு தொடங்கி சின்னமுத்தூர் என்ற இடத்தில் நொய்யல் ஆற்றில் தடுப்பணையில் இருந்து அஞ்சூர் ஊராட்சி கொளந்தாபாளையத்தில் கரூர் மாவட்ட எல்லையை நொய்யல் ஆறு தொடுகிறது. பிறகு மேற்கண்ட ஊர்கள் வழியாக கரூர் ஒன்றியத்தில் நொய்யல் ஆறு சென்று கா விரியில் கலக்கிறது. எனவே நொய்யல் ஆற்றில் நிறம் மாறி வரும் தண்ணீர் கலப் பதை தடுக்க உரிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தி நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்தார்.

**<u>அனைத்து விவசாயிகளுக்கும் பயிர்க்கடன் வழங்க வலியுறுத்தல்</u>**

கரூர், : அனைத்து விவசாயிகளுக்கும் பயிர்க்கடன் வழங்க வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். கரூர் மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழையளவு 652.2 மிமீ. நடப்பாண்டு சராசரி அளவை விட 10

சதவீதம் கூடுதலாக மழை பெறப்பட்டுள்ளது. இதே போன்று பயிர் சாகுபடியும் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு 33 சதவீதம் கூடுதலாக செய்யப்பட்டுள்ளது. மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதிகளிலும் மழை பெறப்பட்டுள்ளதால் மானாவாரி பயிர்களான சோளம், கம்பு, நிலக்கடலை, எள் மற்றும் பயறு வகை பயிர்கள் 15,781 எக்டேரில் சாகுபடி ஆனது. வாய்க்கால், கிணற்றுப்பாசனத்தை கொண்டு சம்பா பருவ நெல்நடவு மேற்கொள்ளப்ட்டது. மொத்தம் நெல் 13,589 எக்டேரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கடந்த 4 ஆண்டுகளை ஒப்பிடுகையில் வாய்க்கால், கிணற்றுப்பாசனம் இந்த ஆண்டு அதிக அளவில் இருந்தது. காவிரி பாசன ஆயக்கட்டு விவசாயிகள், ஏரி, குள ஆயக்கட்டு விவசாயிகள், கிணறு, ஆழ்கிணறு நீர் ஆதார விவசாயிகள் மானாவாரி விவசாயிகள் என வகைப்படுத்தப்பட்டிருக்கிறது. பணப் பயிர்களான வாழை, கரும்பு, வெற்றிலை, கோரையினையும், காலங்காலமாக ஆண்டுக்கு 11 மாத உத்தரவாத நீராதாரத்தை கொணடு சாகுபடி செய்யப்பட்டு வந்தது. கடந்த 3 ஆண்டுகளாக பருவமழை பொய்த்ததால் இரு போக சாகுபடி பாதிக்கப்பட்ட நிலையில் இந்த ஆண்டு நல்ல விளைச்சல் இருந்தது. கர்நாடகத்தில் பெருமழை பெய்து அணைகள் நிரம்பியதால் வரும் உபரிநீரை வைத்தே நல்ல சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது. இருக்கும் நீரை பயன்படுத்தி சாகுபடி பணிகளை தொடர பயிர்க்கடன்களை அனைத்து விவசாயிகளுக்கும் வழங்க

வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். இதுபற்றி விவசாயிகள் கூறுகையில், கடந்த நான்கு ஆண்டுகளாக பாசனநீர் நிலைமை மோசமானது. இந்த ஆண்டு மழை பொய்த்த ஆண்டாக துவங்கியது. ஆண்டிறுதியான அக்டோ பர், நவம்பரில் நல்ல மழை பெய்தது. விவசாயிகள் அனைத்து விதமான பயிர்களையும் விளைவிக்க ஏதுவாக பயிர்கடன்களை அனைத்து விவசாயிகளுக்கும் வழங்க வேண்டும். பயிர்கடன்களை வாங்குவதில் பாரபட்சம் காட்டு வதை கைவிடவேண்டும். மேலும் நீர்ஆதாரங்கள் பராமரிப்பின்றி கிடக்கிறது. நீர்ஆதாரப்பாதை ஆக்கிரமிப்புகளினால் பாசனம் செய்ய இயலாமல் இருக்கிறது. ஆக்கிரமிப்புகளை அகற்ற பலமுறை வலியுறுத்தியும் அரசு நடவடி க்கை எடுக்காமல் உள்ளது. மேலும் வங்கிகள், கூட்டுறவு துறை மூலமும் பயிர்கடன்பெறுவதில் காலதாமதம் ஏற்படுகிறது. வேளாண் துறை, தோட்டக்கலை துறை வாயிலாகவும் விதை, கன்று, நாற்று போன்றவைகளும் உரம் போன்றவைகளும் உரிய நேரத்தில் கிடைக்க செய்திட வேண்டும். மேற்கண்ட காரணங்களினால் விவசாயம் செய்ய முடியாமல் பல விவசாயிகள் தவிக்கின்றனர். அவர்களை கண்டறி ந்து பாதிக்கப்பட்ட விவசாயிகளின் பயிர்க்கடனை த ள்ளுபடி செய்ய வேண்டும். அரசு நடவடிக்கை எடுக்கும் என்கிற எதிர்பார்ப்பில் இருப்பதாக தெரிவித்தனர்.

**அனைத்து பேரூராட்சிகளிலும் குப்பையில் இருந்து உரம் தயாரிக்கும் பணி**

கரூர், : கரூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து பேரூராட்சிகளிலும் குப்பையில் இருந்து உரம் தயாரிக்க பயிற்சி அளிக்கப்பட்டு, உரம் தயாரிப்பு பணி நடைபெற்று வருகிறது. கரூர் மாவட்டத்தில் பேரூராட்சி, ஊராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் மண்புழு உரம், காஸ் தயாரிக்க திட்டமிடப்பட்டு முதல் கட்டமாக பேரூராட்சிகளில் குப்பையில் இருந்து உரம் தயாரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. கரூர் மாவட்டம் குளித்தலை மருதூர் முதல்நிலை பேரூராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் மண்புழு உரம், தயாரித்து அதனை பேரூராட்சி நிர்வாகம் விற்பனை செய்கிறது. இதேபோல் மாவட்டத்தில் 11 பேரூராட்சிகளிலும் இத்திட்டத்தை செயல்படுத்த உள்ளாட்சி நிர்வாகம் முடிவு செய்துள்ளது. திடக்கழிவு மூலம் உரங்கள் தயாரிப்பதற்காக பேரூராட்சி தலைவர்கள் மற்றும் முன்னணி விவசாயிகளுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலான பேரூராட்சி பகுதிகளில் சேரும் குப்பைகளை ஒருங்கிணைத்து திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் மூலம் மக்கும் பொருளாக மாற்றி அதன் மூலம் மண்புழு உரங்கள் தயாரிக்கப்பட்டு விவசாயத்திற்கு பயன்படுத்துகின்றனர். இதன்மூலம் பேரூராட்சி பகுதிகளும் தூய்மையடைகின்றன. இதுகுறித்து அதிகாரிகள்

கூறுகையில், கரூர் மாவட்டத்திற்குட்பட்ட 11 பேருராட்சியிலும் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் மூலம் மண்புழு உரம் தயாரித்து இயற்கை முறை விவசாயத்தை கடைபிடித்து நல்ல மகசூலைப்பெற வழிவகை செய்யப்படும். மேலும் அனைத்து பேரூராட்சிகளிலும் பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்துவதை தடை செய்ய வேண்டும். பொதுமக்களுக்கு தேவையான விழிப்புணர்வினை பேரூராட்சித் துறையின் மூலம் அவ்வப்போது ஏற்படுத்தப்பட உள்ளது. பொதுவாக மக்கள் வசிக்கும் தெருக்களில் தேங்கும் குப்பைகளை உடனுக்குடன் அகற்றி அதை மண்புழு உரம் தயாரிக்க பணிகள் மேற்கொள்ளும்போது ஊரகப் பகுதியும் தூய்மையாவதுடன் முழுமையான சுகாதாரம் பேணப்படுகிறது. திடக்கழிவு மூலம் உரம் தயாரிப்பது மட்டுமின்றி எல்பிஜி கேஸ் எரிவாயுவும் தயாரிக்கலாம். இதனால் தேவைகளை அதிகளவில் பூர்த்தி செய்வதுடன் பேரூராட்சிகளின் பொருளாதார வளர்ச்சியும் அதிகரிக்கும். அந்த அளவுக்கு பயிற்சி திறனை வளர்த்துக்கொள்ளவதில் தான் இதன்வெற்றி அமையும் என்றனர்.

**<u>நீடித்த நவீன கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ரூ.35 ஆயிரம் மானியத்தில் உரம், இடுபொருள் கலெக்டர் தகவல்</u>**

புதுக்கோட்டை, : நீடித்த நவீன கரும்பு சாகுபடி திட்டத்தின் கீழ் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஒரு எக்டருக்கு நீரில் கரையக்கூடிய உரம் உட்பட இதர இடுபொருட்கள் ரூ.35 ஆயிரம் மானியத்தில் வழங்கப்பட

உள்ளது என கலெக்டர் கணேஷ் தெரிவித்துள்ளார். புதுக்கோட்டை கலெக்டர் அலுவலகத்தில் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நேற்று நடைபெற்றது. கூட்டத்தில் கலெக்டர் கணேஷ் தலைமை வகித்து பேசியதாவது: புதுகை மாவட்டத்தில் நடப்பு மாதம் வரை நெல் 66,000 எக்டர் பரப்பளவிலும், சிறுதானியங்கள் 5,652 எக்டர் பரப்பளவிலும், பயறுவகைப் பயிர்கள் 5,377 எக்டர் பரப்பளவிலும், கரும்பு 2,700 எக்டர் பரப்பளவிலும், எண்ணெய்வித்து பயிர்கள் 6,705 எக்டர் பரப்பளவிலும், பருத்தி 14 எக்டர் பரப்பளவிலும் மற்றும் தென்னை 8,189 எக்டர் பரப்பளவிலும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மாவட்டத்திலுள்ள 33 வேளாண் விரிவாக்க மையங்களில் 137.79 மெடன் நெல் விதைகளும், 7.2 மெ.டன் பயறு விதைகளும் நிலக்கடலை 11.23 மெ.டன் தற்சமயம் இருப்பில் உள்ளது. விவசாயிகள் தரமான சான்று பெற்ற விதைகளை வேளாண் விரிவாக்க மையங்களிலிருந்து பெற்று சாகுபடி செய்து பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. உரிமம் பெற்ற கூட்டுறவு மற்றும் தனியார் விற்பனை மையங்களிலும் சான்று பெற்ற விதைகள் கிடைக்கத்தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு தேவையான தர மான உரங்கள் தடையின்றி உரிய நேரத்தில் கிடைக்க தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. புதுகை மாவட்டத்தில் தற்போது டிஏபி 969 மெ.டன்னும், யூரியா 869 மெ.டன்னும், பொட்டாஷ் 1,453 மெ.டன்னும், 1,113 மெடன்

காம்ப்ளக்ஸ் உரங்கள் இருப்பு வைக்கப்பட்டு கூட்டு றவு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் மூலம் விவசாயிகளுக்கு விநியோகம் செய்து வரப்படுகிறது. தற்போது நிலவிவரும் தட்பவெட்ப நிலை நெற்பயிரில் குலைநோய் வருவதற்கு சாதகமாக உள்ளது. ஆகவே விவசாயிகள் இந்நோயின் தாக்குதல் பொருளாதார சேத நிலைக்கு மேல் இருந் தால் டிரை சைக்ளோசோல், என்ற மருந்தினை ஏக்கருக்கு 120 கிராம் தெளித்து கட்டுப்படுத்திட வேண்டும், நெற்பயிரில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை செய்திட வரப்பில் உளுந்து அல்லது தட்டைபயறு சர்குபடி செய்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மாவட்டத்தில் சிறுதானிய பயிர்களான கேழ்வரகு, கம்பு, சோளம், சாமை மற்றும் குதிரைவாலி விதைகள் போதுமான அளவு வட்டார வேளாண் விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இதனை விவசாயிகள் பெற்று பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள். நடவு முறையில் து வரை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தில் ஒரு எக்டருக்கு இடுபொருள் மானியமாக ரூ 7,500 வழங்கப்படுகிறது. நடப்பாண்டில் இத்திட்டம் 350 எக்டர் பரப்பளவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நடப்பாண்டில் நீடித்த நவீன கரும்பு சாகுபடி திட்டம் 150 எக்டர் பரப்பளவில் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தில் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஒரு எக்டருக்கு நீரில் கரையக்கூடிய உரம் உட்பட இதர இடுபொருட்கள்

ரூ.35 ஆயிரம் மானியத்தில் வழங்கப்பட உள்ளது என்றார்.

இக்கூட்டத்தில் டிஆர்ஓ மாரிமுத்து, மாவட்ட வேளாண் துறை இணை இயக்குநர் ஷாஜகான் மற்றும் அலுவலர் உள்பட அனை த்துத் துறை அலுவலர்கள், பாரதிய கிசான் சங்க விவசாயிகள் மற்றும் விவசாய சங்கப் பிரதிநிதிகள் உள்பட பலர் பங்கேற்றனர்.

## மஞ்சள் குவின்டாலுக்கு ரூ.15 ஆயிரம் விலை நிர்ணயம் செய்ய வேண்டும்

ஈரோடு, : மஞ்சளுக்கு குறைந்த ஆதரவு விலையாக குவின்டாலுக்கு 15 ஆயிரம் ரூபாய் நிர்ணயம் செய்ய வேண்டும் என்று ஈரோடு எம்.பி., செல்வக்குமாரசின்னையன் வலியுறுத்தியுள்ளார். ஈரோடு பாராளுமன்ற உறுப்பினர் செல்வகுமாரசின்னையன் தெரிவித்துள்ளதாவது: பாராளுமன்றத்தில் விவசாயத் துறை மீதான விவாதம் நடந்தது. இந்தியா ஒரு விவசாயம் சார்ந்த நாடாகும். நமது நாட்டில் பெரும்பான்மையான மக்கள் விவசாயம் செய்து வருகிறார்கள். நாட்டின் ஒரு பகுதியில் விவசாயத்திற்கு தேவையான நீராதாரம் போதுமான அளவில் இல்லை. நாட்டில் அனைத்து நதிகளையும் இணைப்பதன் மூலம் விவசாயத்திற்கு தண்ணீர் பற்றாக்குறை பிரச்னை தீரும். விவசாயிகளுக்கு விவசாய விலை பொருட்களுக்கு போதுமான விலை கிடைப்பதில்லை. எனவே, மத்திய அரசு விவசாயிகளுக்கு கிணறு வெட்டுவதற்கும், சொட்டுநீர்

பாசனத்திற்கும், வேளாண் பயிர் செய்ய வேளாண் நிலத்தை மேம்படுத்தவும் தகுந்த மானியம் அளிக்க வேண்டும். மேலும் கிணறு மற்றும் ஆழ்குழாய் கிணறுகளுக்கு உடனடியாக மின் இணைப்பு தர வேண்டும். பெரும்பான்மையான விவசாயிகள் கூட்டுறவு வங்கி மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் கடன் பெற்றுள்ளனர். விளைச்சல் நிலத்தில் போதுமான வருமானம் கிடைக்காததால் விவசாயிகளால் கடனை திருப்பி செலுத்த முடியாத நிலை உள்ளது. எனவே, மத்திய அரசு விவசாயிகள் கூட்டுறவு மற்றும் தேசிய வங்கிகளில் பெற்ற கடனை முழுவதும் தள்ளுபடி செய்ய வேண்டும். மேலும், மத்திய அரசு விவசாயிகளுக்கு வட்டியில்லாமல் புதிய கடன் வழங்க வேண்டும். தென்னிந்தியாவில் தமிழகத்தில் மஞ்சள் விற்பனை மையங்களில் ஈரோடு முக்கிய நகரமாகும். ஆனால், மஞ்சள் சாகுபடியாளர்களுக்கு குறைந்த ஆதரவு விலை கிடைப்பதில்லை. எனவே விவசாயிகள் பெரும் நஷ்டம் அடைகிறார்கள். ஆன் லைன் வர்த்தகத்தை மத்திய அரசு தலையிட்டு நிறுத்த வேண்டும். மஞ்சளுக்கு குறைந்த ஆதரவு விலையாக குவின்டாலுக்கு 15 ஆயிரம் ரூபாய் என நிர்ணயிக்க வேண்டும். அதேபோல் விவசாயத்தில் பயிர் செய்தல் நவீனமயமாக்க வேண்டியது தற்போது மிகவும் அவசியமாக உள்ளது. மத்திய அரசு விவசாயிகளுக்கு வேளாண் பொறியியல் கருவிகளான டிராக்டர், அறுவடை இயந்திரம்,

நடவு இயந்திரம் ஆகியவைகளை வாங்க மானியம் வழங்க வேண்டும். இவ்வாறு தெரிவித்துள்ளார்.

**<u>கால்நடை பராமரிப்புத்துறை மூலம் மானிய விலையில் உலர் தீவனம்</u>**

ஊட்டி, : நீலகிரி மாவட்ட கால்நடை வளர் ப்பவர்களுக்கு மா னிய விலையில் கால்நடை பராமரிப்பு துறை மூலம் உலர் தீவனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவ தாக கால்நடை துறை சார்பில் விவசாயிகள் குறை தீர்ப்பு நாள் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. ஊட்டியில் உள்ள மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு, மாவட்ட வருவாய் அலுவலர் பாஸ்கரபாண்டியின் தலைமை வகித்தார். தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர் மணி முன்னிலை வகித் தார். அனைத்து துறைகளை சார்ந்த உயர் அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் கலந்துக் கொண்டனர். கூட்டத்தில், விவசாய சங்கங்களிடமிருந்து கோரிக்கைகள் பெறப்பட்டு உரிய துறை அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டு விவரம் பெற்று குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பதில் தெரிவிக்கப்பட்டது. ஊட்டி ஆவின் நிறுவ னம் மூலம் 2015-17 ஆண்டிற்கான பால் சேகரம், விநியோகம், கால்நடை மருத்துவம் மற்றும் களப்பணியாளர்களுக்கென இர ண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒப்பந்த புள்ளி யின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஆவின் பாலகங்களின் பால் மூலம் தயாரிக்கப் படும் பொருட்கள் மட்டும் வழங்கப்பட்டு, சுத்தமாக வைக்க

அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என ஆவின் நிறுவன அதிகாரிகள் தெரிவித்தனர். இலவச விவசாய மின் இணைப்பு வேண்டி பெறப்படும் விண்ணப்பங்களை செயற்பொறி யாளர் அலுவலகத்தில் பதிவு செய்து அரசு குறியீடு பெறப்படும் போது, மூப்பு அடிப்படையில் மின் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது. நீலகிரி மாவட்ட கால் நடை வளர்ப்பவர்களுக்கு மானிய விலையில் கால் நடை பராமரிப்பு துறை மூலம் உலர் தீவனம் வழங்க நடவடிக்கை எடுப்பட்டு வருவதாக கால்நடை துறை சார்பில் தெரிவிக்கப்பட் டது.மண்புழு உரம் கூடா ரம் அமைக்க முன்வரும் விவசாயிகளுக்கு மானியத்துடன் மண் புழு உர கூடாரம் அமைக்க சம்பந்தப்பட்ட தோட்டக்கலை உதவி இயக்குநரை அணுகி உதவி பெறலாம் என தெரிவிக்கப்பட்டது. தோட்டக்கலை துறை யின் மூலம் ரசாயன உரம் மற்றும் பூச்சி மருந்துகள் பயன்பாட்டினைக் குறைத்து இயற்கை உரங் களை அதிக அளவில் பயன்படுத்தும் வகையில் மானிய திட்டங்கள் செயல்படுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

## <u>தனியார் பூங்கா உரிமையாளர்களுக்கு 22 ஆயிரம் மலர் நாற்று விநியோகம்</u>

ஊட்டி, : கோடை விழாவில் பங்கேற்கும் தனியார் பூங்கா உரிமையாளர்களுக்கு தோட்டக்கலைத்துறை மூலம் 22 ஆயி ரம் மலர் நாற்று விநியோகம் செய்யப்பட்டுள்ளது. ஆண்டு தோறும் மே மாதம் ஊட்டியில் உள்ள மலர் கண்காட்சி நடந்து வருகிறது. இந்த மலர்

கண்காட்சியின் போது, நீலகிரி மாவட்டத்தில் உள்ள தனியார் பூங்காக்கள், தொழிற்சாலைகள், குடியிருப்பு, கல்வி நிலையங்கள் போன்றவைகளில் பராமரிக்கப்படும் பூங்காக்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டு வருகிறது. இந்த பூங்கா உரிமையாளர்களுக்காக தோட்டக்கலைத்துறை மூலம் ஆண்டு தோறும் பல்வேறு வகையான மலர் நாற்றுக்கள் உற்பத்தி செய்யப்பட்டு மலிவு விலையில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. கடந்த மாதம் முதல் இந்த மலர் நாற்றுக்கள் தனியார் பூங்கா உரிமையாளர்களுக்கு குறைந்த விலை யில் வழங்கப்பட்டு வரு கிறது. தமிழகம் மாளிகை நர்சரி மற்றும் ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் இருந்து 22 ஆயிரம் பல் வேறு ரக மலர் நாற்றுகள் தனியார் பூங்கா உரிமையாளர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. மேலும் 20 ஆயிரத்திற்கும் மேல் மலர் நாற்றுகள் நர்சரியில் இருப்பில் உள்ளன. இந்த மலர் நாற்றுகளும் தனியார் பூங்கா உரிமையாளர்களுக்கு வழங்கப்படவுள்ளதாக பூங்கா நிர்வாக அதிகாரிகள் தெரிவித்தனர். தற்போது ஆப்பிரிக்கன் மேரிகோல்டு, பேன்சி மற்றும் ஜீனியா போன்ற மலர் நாற்றுகள் உள்ளன. கோடை சீசன் நெருங்கிய நிலையில் மலர் நாற்றுக் களை வாங்கி நடவு செய்யும் பணியில் தனியார் பூங்கா உரிமையாளர்கள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

**<u>எண்ணை வித்து பெருக்கு திட்டம் பளிங்காநத்தத்தில் விவசாயிகளுக்கு பயிர் சாகுபடி பயிற்சி</u>**

திருமானூர், : பளிங்காநத்தத்தில் எண்ணை வித்து பெருக்கு திட்டத்தில் விவசாயிகளுக்கு பயிர் சாகுபடி பயிற்சி அளிக்கப்பட்டது, திருமானூர் அடுத்த பளிங்காநத்தம் கிராமத்தில் எண்ணெய் வித்து பெருக்கு திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பயிற்சியளிக்கப்பட்டது. இதில் எண்ணெய் வித்து பயிர் சாகுபடி முறைகள் குறித்து வேளாண் உதவி இயக்குனர் பாபு விளக்கி கூறினார். பயிற்சியில் விதை தேர்வு, விதை நேர்த்தி, உழவியல் தொழில்நுட்பங்கள், பயிர் பாதுகாப்பு, அறுவடைத் தொழில் நுட்பங்கள் குறித்து வேளாண் அலுவலர் செல்வகுமார் மற்றும் வட்டார தொழீல்நுட்ப மேலாளர் கலைமதி ஆகியோர் விளக்கி கூறினர். இதில் உதவி வேளாண் அலுவலர் ரமேஷ் மற்றும் வேளாண் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண் டனர். பளிங்காநத்தம் கிராமத்தில் விரிவாக்க சீரமைப்பு திட்டத்தில் தோட்டக்கலை பயிர் சாகுபடி குறித்த பயிற்சி நடைபெற்றது. இதில் தோட்டக்கலை துறை திட்டங்கள் மற்றும் தோட்டக்கலை சாகுபடி குறித்து தோட்டக்கலை அலுவலர் சரண்யா மற்றும் உதவி அலுவலர் தர்மராஜ் ஆகியோர் விளக்கி கூறினர். பயிற்சிக்கு வேளாண்மை உதவி இயக்குனர் பாபு தலைமை வகித் தார். இதில் தோட்டகலை மற்றும்

வேளாண் துறை அலுவலர்கள் பயிற்சி அளித்தனர். பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

**<u>தென்னையை தாக்கும் நுனி சிறுத்தலை கட்டுப்படுத்த வேளாண் அதிகாரி விளக்கம்</u>**

சேதுபாவாசத்திரம், . தென்னையை தாக்கும் கொண்டை வளைதல் மற்றும் நுனி சிறுத்தல் நோயினை கட்டுப்படுத்தும் வழிமுறை பற்றி சேதுபாவாசத்திர வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் பெரியசாமி விளக்கமளித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில் கூறியிருப்பதாவது: கொண்டை வளைதல் நோயானது போரான் சத்து பற்றாக்குறைவினால் ஏற்படுகிறது. 3 ஆண்டு வயதுடைய இளம் மரங் களில் காணப்படும். தென்னை இலைகள் சிறு த்து விரிவடையாமலும், இலைகள் இயல்பான நிலையில் விரிவடையாமல் ஒன்றோடொன்று பின்னிக்கொண்டு வெளிவர இயலாத நிலை யில் காணப்படும். வளர்ந்த மரங்களில் இலைகளின் வளர்ச்சி மிகவும் குறைந்து மட்டைகள் குருத்து பாகத்திலிருந்துவளைந்துகாணப்படும்.

குறைபாடு முற்றிய நிலையில் குரும்பைகளும், இளம் கன்றுகளும் உதிர்ந்துவிடுகின்றன. இதனை நிவர்த்தி செய்ய மரம் ஒன்றிற்கு 50 கிராம் வெண்காரம் (போராக்ஸ்) 2 முறை தொடர்ந்து 3 மாத இடைவெளியில் அளிப்பத னால் இலைகள் நன்றாக பிரிந்து வளர்ச்சி யடைகிறது. வேர் மூலம் 25 பிபிஎம் அளவு போரான் கரைசலை செலுத்துவதால் மரம்

போரான் குறை பாட்டிலிருந்து உடன டியாக நிவர்த்தியடைகிறது. எனினும், மண்ணில் போராக்ஸ் இடுவது மரத்திற்கு நீண்டகால பலனை கொடுக்கும். நுனி சிறுத்தல் நோயானது ஆரம்ப நிலையில் மட்டைகள் மஞ்சள் கலந்த பச்சை நிறத்துடன் தோற்றமளிக்கும். இது தொடரும்போது, இலை இனுக்குகளில் பச்சையம் குறைந்த சூரிய ஒளியின் மூலம் தாவர உணவு தயாரித்தல் வெகுவாக தடைபடுகிறது. இதனால் மரத்தின் வளச்சி பாதிக்கப்பட்டு மட்டைகளின் நீளம், அகலம் குறைந்து சிறுத்து விடுகின்றன. மட்டை களின் எண் ணிக்கை குறைவதுடன் பாலை களின் உற்பத்தி குறைந்து அளவில் சிறுத்தும் காணப்படும். காய்களின் உற்பத்தி எண்ணிக்கை குறைகிறது. மேலும் காய்கள் சிறுத்து, தண்ணீர் வற்றி பருப்பின் அளவு குறைந்து காணப்படும். குறைபாடு முற்றிய நிலையில் வளர்ச்சி பகுதி முற்றிலும் நிறுத்தப்பட்டு தண்டுப்பகுதி பென்சில் முனை போன்று சிறுத்து மரம் பட்டுவிடுகிறது. இதனை நிவர்த்தி செய்ய ஆரம்ப நிலையில் உள்ள மரங்களை மட்டுமே காப்பாற்ற முடியும். பெர்ரஸ் சல்பேட் 2000 பிபிஎம் (2கிராம் 1 லிட்டர் நீரில்) செலுத்தலாம் அல்லது மரம் ஒன்றிற்கு துத்தநாக சல்பேட், தாமிர சல்பேட், மாங்கனீசு சல்பேட், பெர்ரஸ் சல்பேட் மற்றும் போராக்ஸ் இவை ஒவ்வொன்றும் 225 கிராம் மற்றும் அம்மோனியம் மாலிப்டேட் 10 கிராம் ஆகிய நுண்ணூட்ட சத்துக்களை 10 லிட்டர் தண்ணீரில் கரைத்து மரத்தின் வேர் பகுதியில் ஊற்ற வேண்டும். மேலும்

10 நாட்களுக்கு ஒரு முறை கோடையில் தண்ணீர் பாய்ச்சுவது அவசியமாகும். பென்சின் முனை தோற்றத்துடன் காணப்படும் மரத்தினை வெட்டி அகற்றிவிட்டு தென்னங்கன்றுகளை மீண் டும் நடுவது நல்லது என அதில் குறிப்பிட்டுள்ளார்.

## வேளாண் விரிவாக்க செயல்திட்டம் தயாரிப்பு

புதுச்சேரி, : புதுச்சேரி வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை சார்பில் மாவட்ட வேளாண் விரிவாக்க செயல்திட்டம் 2015-16 தயாரிப்பதற்கான கலந்துரையாடல் நிகழ்ச்சி கூடுதல் வேளாண் இயக்குனர் அலுவலகத்தில் உள்ள உழவர் பயிற்சி கூடத்தில் நடந்தது. ஆத்மா திட்ட துணை இயக்குனர் சந்தானகிருஷ்ணன் வரவேற்றார். கூடுதல் இயக்குனர் ரவிபிரகாசம் தலைமை தாங்கி, ஆத்மா திட்டத்தின் 2014-15க்கான செயல்பாட்டு அறிக்கை மற்றும் விவசாயிகளுக்கு மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் பற்றி விளக்கினார். மேலும் 2015-16ம் ஆண்டிற்கான செயல்திட்டத்தில் இடம்பெற வேண்டிய முக்கிய அம்சங்கள் குறித்தும் விளக்கினார். துணை இயக்குனர்கள் கார்த்திகேயன், முருகேசன் ஆகியோர் கலந்து கொண்டு தங்கள் கருத்துகளை கூறினார். நிகழ்ச்சியில் வேளாண் அலுவலர்கள், கால்நடை மருத்துவர்கள், மீன் வளத்துறையினர், வேளாண் சார்புடைய தொழில்நுட்ப வல்லுனர்கள் கலந்து கொண்டு வேளாண் விரிவாக்க செயல்திட்டம் தயாரித்தனர்.விவசாய பிரதிநிதிகள் கலந்து கொண்டு

தற்போதைய சூழ்நிலையில் வேளாண்மை மற்றும் அதனை சார்புடைய துறைகளில் கடைபிடிக்க வேண்டிய புதிய தொழில்நுட்பங்களை ஆத்மா செயல்திட்டத்தில் சேர்த் திட வலியுறுத்தினர். நிறை வாக புதுச்சேரி ஆத்மா திட்ட மாவட்ட வரைவு வேளாண் விரிவாக்க செயல்திட்டம் தயாரிக்கப்பட்டது.